தேர் நெல கொண்டு
நின்ன எடமெல்லாம்
தென்தூசி பறந்தது!


அருவாளோடு கம்பீரமாய்
சுத்தி காவலுக்கு நின்ன
தெய்வமெல்லாம்
உசுர கையில புடுச்சிக்கிட்டு
கழிஞ்சிக்கிட்டு நின்னுச்சி!

மேல் சாதி காரனை,
கீழ்சாதி காரன் அடிச்சது
இதுதான் முதல்முறை.
நம்பவே முடியல,
பார்த்த கூத்தாயிக்கே
வேத்துப்போச்சி!



**கீழாண்ட வீடு வெளியீட்டகம்**
குளந்திரான்பட்டு,
புதுக்கோட்டை - 622 302.

# ஊரார் வரைந்த ஓவியம்



துரை. குணா

# ஊரார் வரைந்த ஓவியம்

துரை. குணா

**கீழாண்ட வீடு வெளியீட்டகம்**
குளந்திரான்பட்டு,
புதுக்கோட்டை - 622 302.
கைபேசி: 99428 54766

**ஊரார் வரைந்த ஓவியம்**
ஆசிரியர்: துரை. குணா

இரண்டாவது பதிப்பு: பிப்ரவரி 2015
வெளியீடு: கீழாண்ட வீடு வெளியீட்டகம்,
குளந்திரான்பட்டு,
புதுக்கோட்டை – 622 302.

அக–புற வடிவமைப்பு: ஜீவமணி
அச்சாக்கம்: அம்பிகை அச்சகம்,
சென்னை 600 014

விநியோக உரிமம்:
**கருப்புப் பிரதிகள் - தலித்முரசு**
பி55, பப்பு மஸ்தான் தர்கா,
லாயிட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி,
சென்னை 600 005
பேச: 94442 72500
மின்னஞ்சல்: karuppupradhigal@gmail.com

**விலை: ரூ. 40**

**ஒழுங்கா படிக்கலைன்னா,
மணியக்கோனார் ஊட்டுல கொண்டே
பண்ணைக்கி வையிங்க, எரும மாட்ட
மேச்சிக்கிட்டு, மூத்தர கோடியிலே
கூல வாங்கி குடிச்சிக்கிட்டு இருந்தா
தான் அவனுக்கு புத்தி வரும், என்று
சின்னவயசுல என்னை திட்டிய
என் அம்மாவிற்கும்.**

**மேடை ஏறினாலும்
நீ மேதையாத்தான் ஏறனும்,
மார்க்சிய தத்துவங்களை அவ்வப்போதுச்
சொல்லி, கட்சி தாண்டா நம்ம உசுரு...
கட்சியில்லன்னா, நொப்பன் தல
எப்போவோ? உருண்டுருக்கும் என்று
என்னை வழி நடத்திய
என் அப்பாவிற்கும்.**

**இந்நூல்...**

# அணிந்துரை

அன்பான அன்னை அழுகிறாள் ஆயினும் அறிய லட்சியத்தை
ஏற்றதனால் நான் மேலே மேலே செல்வது உறுதி என்பார்.
– உத்தம கவிஞர் உல்ரீஹ வான்

**தா**ன் பிறந்த மண்ணில் தாம் வாழும் காலத்திலேயே சாதாரண மக்களின் அன்பு, பாசம், நட்பு என மிகுதியானதோர் பிணைப்பை ஒரு காவியமாக தீட்டி ஊரார் வரைந்த ஓவியம் என்ற நூலிற்கான உழைப்பின் மூலம் வியக்க வைத்துள்ளார் குணா.

உழவர் மக்களின் கிராமத்து மண்வாசத்தை நுகர்ந்து, உழைப்பை சுரண்டும் வேடதாரிகளின் உள்மனதை கற்பனை எனும் கயிறால் கட்டி மேலே இழுத்து கலகத்தன்மை வாய்ந்த மாற்றங்களின் சாரத்தை எழுதுகோலால் பிழிந்து நூலாக்கி எங்களைப் பருகவைத்த படைப்பாக பார்க்கிறேன்.

கொந்தளிப்பான நிகழ்ச்சிகளை எளிதாகவும், கடினமான துயரத்தை மிருதுவாகவும் தொகுத்து சிறிய நூலாக்கி வாசிக்கும் பொழுது அதிரவைக்கும் பிரம்மையை ஏற்படுத்துகிறது. இப்பணி எளிதானதல்ல என்பதை உணர்கிறேன் என்றாலும் இதில் வரும் கருத்துக்கள் சம்பவங்கள் பெயர்கள் எல்லாம் ஊரார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலமாகும். உண்மைகளை துருவி துருவி ஆராயும் போது இயக்கவியல் மனம் மிளிரச்செய்துவிடும் என்பதை இந்த சிறிய நூல் உணர்த்துகிறது.

போர்க்களமான பூமியில் பழமைவாத எதிர்ப்பு எனும் ஆயுதத்தால் மூடநம்பிக்கையனும் அரக்கனை தனது நய்யாண்டி என்ற சவுக்கால் விளாசுவது துணிச்சலான நிஜமாகும். சமூகத்தில் கண்டவற்றையும் கேட்டவற்றையும் அனுபவத்துடன் அர்த்தம்காணும் விதமாக பயன்படுத்தி மனஉணர்வுகளின் உள்ளகிடக்கை கிளர்ச்சி பெற செய்கிறது. சாதாரண மனிதனின் வாழ்வும் ஜீவிதமடையும் என்ற நம்பிக்கையை எழச்செய்கிற முயற்சி பாராட்டுக்குரியதாகும்.

மனிதனை பிறப்பால் உதாசீனப்படுத்தி இழிசெய்த கடந்த காலத்தின் துயரத்தை பகுத்தறிவு எனும் அனலில் உருக்கி கண்ணீர் வடித்திடும் வேதனையான்று கிளர்ந்தெழச் செய்கிறது. எழுதுகோலை பிடித்து ஊடலும் கூடலும் கலந்த வார்த்தைகளால் கிராமத்தின் வாழ்வை கவிதை நடையில் எழுதியதை சுவாசிக்கும் போது எழுத்தாளரின் சமூக அக்கறைக்கான முகம் எனது மனக்கண் முன்னே கம்பீரமாக நிற்கிறது. படைப்பு என்பது எழுத்தாளனின் சக்திக்கும் திறமைக்கும் ஏற்ற வகையில் தான் அமையும் என்பார்கள். குணா தனது இளம் வயதில் சமூகத்தில் நடக்கும் அக்கிரமத்தை வெளிப்படுத்தும் விதம் பாரதி கண்ட அக்கினி குஞ்சாய் எழுத்துலகில் சிறகடித்திட எதிர்காலம் பிரகாசமாய் தெரிகிறது.

சாதாரண ஏழை குடும்பத்தில் பிறந்தவர்களின் வாழ்வில் கண்முன்னே நடக்கும் கொடுமையை கண்டும் காணாமல் செல்லும் மனிதர்களுக்கு மத்தியில், 'ஊர் ஓடும்போது ஒத்துஓடு' என வியாக்கானம் சொல்லி சுரண்டல் நீடிப்பது சமூக ஏற்றத்தாழ்வுகள் வளர்வது தாங்கிக் கொள்ளமுடியாத துயரமாகும். சுரண்டப்படும் மக்களோடு இணைந்து பணியாற்றிடும் போது அம்மக்களின் விழிப்புணர்வுக்கு மிகுந்த உந்துசக்தியாக ஊரார் வரைந்த ஓவியம் எனும் நூல் இருப்பது சிறப்பானதாகும் என நம்புகிறேன். இந்த புத்தகத்தினை கையில் வாங்கும் போது இருந்த மலர்ச்சி வாசித்து பார்க்க பார்க்க சமூக அக்கறையை விரும்பும் மனிதனுக்கு அழுத்தமான செய்தி ஒன்றை சொல்கிறது. மக்கள் அடைகிற சமூக மாற்றத்தில் தான் சமூகநீதிக்கான வெளிச்சம் கிடைக்கும் என உணர்த்துகிறது. இந்த புத்தகத்தை வாசிக்கும் அனைவரும் உணர்வீர்கள் பெரும் உத்வேகம் பெறுவீர்கள் என்பது எமது நம்பிக்கையாகும்.

இப்புத்தகத்தை வாசிக்கும்போழுது வயற்காடுகள் நிறைந்த செழிப்பான நந்தவனத்திற்குள் ஒரு அழகிய கிராமம் தெரிகிறது. அதனுள் அரிதிலும் அரிதான மனிதவாழ்வில் அன்பை நேசிக்கும் அன்பர்கள் ஒருபுறம், இதயத்தை தொலைத்து இரக்கமற்ற வேற்றுமைகள் மறுபுறம் உலாவுகிறது. இதனை இதமாகவும் பதமாகவும் இப்புத்தகம் வெளிப்படுத்துகிறது. மனித உயிர் மகோன்னதமானது வாழ்வின் பயணத்தில் இழிநிலையற்ற சமூக வாழ்விற்கு வாழைமரம் சார்த்தி வரவேற்பளிக்கும் கவிஞனின் பயணத்தில் எதிர்காலம் பிரகாசிக்கும் என வாழ்த்துகிறேன்.

என்றும் தோழமையுடன்

**மா. சின்னதுரை**

மாவட்டசெயலாளர் சிபிஐ(எம்)

புதுக்கோட்டை.



**“ந**டந்த விசயத்த காலங்கார்த்தால மேல டீக்கடையிலே கேள்விப்பட்டேன்” மேலத்தெரு, காத்தான் மவன் காமராசு சொன்னான்.

“சரிப்போ...”

“நாளக்கி, கூத்தாளம்மன் கோயில் ஆசாரத்துலே நாங்க கிராமமா குந்திப்பேசி முடிச்சி நாங்க ஒருமுடிவு சொல்றோம்”.

“நீ... இதே, கீழத்தெரு, மேலத்தெரு, பில்லக்குறிச்சி நம்மாளுக்கு எட்டுன வரைக்கிம் சொல்லிப்புடு, நாளக்கி காலையிலே வெள்ளனமா ஊர் கூட்டமுனு”.

“வரும்போது... எவனும் காலையிலேயே தண்ணிய, கிண்ணிய போட்டுட்டு வரக்கூடாது. அப்புறம் நான் கடுப்பாயிருவேன்” என்று திலகராஜா சொன்னதும்.

“இதுவரைக்கும் நம்ம ஊருல... நீங்களாயிருந்தாலும் செரி, பூசாரிக்காயிருந்தாலும் செரி, நாங்கப் பேசிதான் இது நாளுவரைக்கிம் தீத்து வைச்சிருக்கோம். இதான் நம்ம ஊரு வழக்க மொற ஊரு மரியாதே. நீங்கலாம் எங்க குடிப்படை. நாங்க அப்படியெல்லாம் உங்கள விட்டர மாட்டோம்”.

நாளைக்கி கோயிலு கொளமுன்னு ஒண்ணுயிருக்கு. காப்புக் கட்டணும். திருவிழா பண்ணனும். நாமல்லாம் ஒரு எடத்துலே ஒண்ணா நின்னுப் பண்ணுனாத்தான் அது நல்லாயிருக்கும்.

இதயெல்லாம் மனசுல வச்சிக்கிட்டு நம்மாளுகக்கிட்டே சொல்லி நாளக்கி, ஒரு நல்ல முடிவோட கூட்டத்துக்கு வாங்கப்பா என்று கலியமூர்த்தியும் சொல்ல.

“சரிங்கையா, சரிங்கையா”, என்று கூழக்கும்பிடுப் போட்டான் எப்போதும் போடும் செல்வம்.

"என்னப்பா... நான் சொல்றது, எல்லாருக்கும் சரிதானே?"

"என்னச் சொறிதானே? நாங்க இங்கே மசுருப் புடுங்கவா வந்திருக்கோம்...? உங்க ரெண்டு பேருக்குள்ளேயே அடங்கிப் போச்சா ஊரு? நாங்க ரெண்டு வார்த்த பேசக்கூடாதா?" என்று வெத்தல எச்சியை காரிப் பொளிச்சினு துப்பி விட்டு, மீசையை தடவியவாறு...

"நடந்தது ஒண்ணும் பெரிய விசயமேயில்லே. இது நம்ம ஊரு, நாமலேப் பேசி தீத்துக்கிறலாம். அதெ வுட்டுப்புட்டு... நான் கட்சியில சொல்லிருக்கேன், கட்சிக்காரனையும் கூட்டத்துக்கு அழைச்சிக்கிட்டு வாரேனு கீழத்தெருவுலே ரெண்டு பேரு சொல்றானாம்? நூறு நாளு வேலைத் தலையிலே பொம்புளைக பேசிக்கிட்ட விசயம் நேத்தே லேசா என் காதுக்கு வந்துச்சி".

"இது நம்ம ஊருல உள்ள விசயம். இங்கே கட்சிக்காறேன் கிச்சிக்காறேனுக்கெல்லாம் வேலையில்லே. வெளியூருலேர்ந்து வந்து, கட்சிக்காரன் எங்கள கேள்வி கேட்பான். அதுக்கு நாங்க பதில் சொல்லணுமா? ஊருக்காரேன் எங்கள சிம்பத்தாடிப்பயலுகனு நெனைக்கக் கூடாது" என்று மச்சு வீட்டுக்காரன் கத்தினான்.

"என்னைக்கி காட்டுவிடுதியான் இந்த ஊருக்குள்ளே, இந்தக் கமிணாட்டிக் கட்சியை கொண்டு வந்தானோ, அன்னையிலேர்ந்து இந்த ஊரு குட்டிச் செவராப் போச்சி"

"இப்போயிருக்குற தமாத்துண்டு வாண்டுப் பயலுவல்லாம் மெட்ராசு, திருப்பூரு, நாமக்கல்லுனுப் போயி, சம்பாரிச்சி நாலுக்காச கண்ணுலப் பாத்ததும், பேண்டு சட்டையலப் போட்டுக்கிட்டு போனு ஒயற காதுல மாட்டிக்கிட்டு இவனுகப் பண்ற அட்டகாசம் இருக்கே, 'சே... சே...' தாங்க முடியலே? நம்மக்கிட்டே. காவைத்து கஞ்சிக்கி கம்முகட்டுல துணிய வைச்சிக்கிட்டு கால்கடுக்க நின்னப் பயலுவ, இன்னைக்கி காருலப் போனா எப்புர்றா ஊருல மழை பேயும்" என்று வளர்ந்த பெருமாள் சலித்துக் கொண்டான்.

"ஊருவிட்டு ஊருவந்து நம்ம ஊருக்கு பொழைக்க வந்தப் பூதிப்பயெல்லாம், பூர்வீக காணிக்காரன் நம்மல பாத்து ஒரு கேள்வி கேட்கும்போது, ஊருக்காரன் நம்மலையே ஆழ நீளம் பார்க்கும் போதும்... போன வருசம் தீத்தான்விடுதியான்கிட்டே வழியக்கப்போய் ஆட்டுத்தலைய தொங்க கொடுத்தது மாறில்ல



இருக்கு?" என்று வெளிய சொல்லாம வார்த்தையமென்னு முழுங்கிகிட்டு வெரப்பா கடுப்புல நின்னான், சிழுகுக்கார கணேசன்.

குறுக்கையும் நெடுக்கையும்மாய் சம்மந்தமில்லாமல் வார்த்தைகள் விழுந்து கொண்ட இருந்தது.

"போன வருசம் கருக்காக்குறிச்சி, ராஜாகுடியிருப்புலே... கீச்சாதிப் பயலுகளுக்கு என்ன வேண்டிக் கெடக்குது 'கேப்பி நியூயர்'னு. இங்கிலீசு வருச பொறப்பண்ணிக்கி நடுராத்திரில தெருத்தாண்டி, வீடு பூந்து... அடிச்சான் பாத்தியா மாப்ளே? அது மாறி இவனுகள அடிச்சாதான், இனிமே இவனுக, நம்மளைப்பாத்து இனி அஞ்சுவானுங்க".

"அவனும், நம்மளும் ஒண்ணா? கருக்காக்குறிச்சிக்காரனுக்கு இருக்குற சாதி ஒணர்வு, ரோசம் நம்ம ஊருக்காரனுக்கு இல்லியே?" என்று ஒட்டுப் பீடியை குடிச்சிக்கிட்டு குத்தவெச்சி குந்திக்கிட்டு ரெண்டுப் பேரு தனியாப் பேசிக்கிட்டு இருந்தாங்கெ.

மதியம் நேரம் முடிந்து மாலை நேரம் வந்தது. அம்பலப்புளி மரத்தடியில்... சரம்மாறியான கேள்விகளுக்குமுன் சங்கரன். கொதிக்கிற எண்ணெயில தடுக்கி விழுந்த குழந்தைமாதிரி துடிதுடித்து மனம் அனத்தி நின்னான், தான் பெற்றப் பிள்ளை செய்த பெரும் தவறை நினைத்து.

'பாழும் திருவளம் பாத்துக்கிட்டுதான் இருந்துச்சி. மாலையும் கழுத்துமா இருக்குற கூத்தாயி வாசலுலேதான் அத்தனையும் நடந்துச்சி'.

'எங்கே வந்து முடிய வேண்டியப் பெரச்சன? ஏன் ஊட்டுல வந்து விடிஞ்சிருச்சி. நடந்ததும் நாளைக்கி என்ன நடக்கப் போகுதோ?' என்று கிட்டிப் போட்டு உதைக்கெனெ உதைத்துக் கொண்டு இருந்தது சங்கரன் மனசுலே...

"புள்ளைய வளத்த லெச்சணம் அப்புடி?"

"புள்ளைய பெத்துப்புட்டா மட்டும் போதுமா?"

"ஒன்மவன் பன்னுனத் தப்புக்கு, நம்மக் குடியானவனால அடிச்சத்தோட விட்டாங்க. வேறு யாருமாயிருந்தா?"

"தாலஞ்சிரார் தல உருளனயே, அங்கேயே... ஒன் மவன் தல உருண்டுருக்கும்" என்று பத்தாததுக்கு, கிளறி விட்டான் நொண்டிக்கருப்பன்.

"ஒத்தப்புள்ளையப் பெத்தவன். பன்னண்டு சட்டம் வைரத்தேர் அச்சாணி முறிஞ்சி முச்சந்தியில் விழுந்து. அக் காலத்துல ஊரு அழிஞ்சது மாறி நின்றான் சங்கரன். வெற்று உடம்புடன் தேகமெல்லாம் மெலிந்து. கண்ணெல்லாம் கோவப்பழமா செவந்து துண்ட வாயிலே வச்சி அமிக்கிக்கிட்டு, பொம்புளமாறி தேமித்தேமி அழுதான், எள மனசுக்காரேன் பார்க்கவே சகிக்கல".

"காத்துலே சாயாத வாழ, ஊர் கூத்துல சாஞ்சது".

"செம்புளியாட்டு கெடை மாதிரி இருந்தக் கூட்டம் கொஞ்ச கொஞ்சமாக கலஞ்சது".

"நாளைக்கி கிராமம். ஊர்க்கூட்டம் போடுறத்துக்கு முன்னாடியே, நாம ஒருக் கூட்டம் போட்டுப் பேச வேண்டியதுயிருக்கு" துண்ட உதறி எழுந்து கலைந்த தன் பங்காளிகளை பார்த்து சொன்னான் மாணிக்கம்.

"எதுக்குணே...?"

"ஆயிரமே இருந்தாலும், சங்கரன் நம்ம ஒடம் பங்காளி. நாளைக்கி அவென் ஊட்டுல எதும் ஒண்ணாயிருந்தா? நாம எல்லாரும் கைகட்டி நிக்கணும். நாளைக்கி அவென் ஊட்டுல ஒரு புள்ளே வயசுக்கு வந்துட்டா? அது நாம எல்லாருக்கும் தீட்டு. நம்ம பங்காளி 'நையப்புடி'யான் ஒரே பட்டத்தாரி கடல் கரை கண்ட வரைக்கும் ஐநூறுத் தலக்கட்டு இருக்குறான். எல்லாரையும் அழைச்சி காப்புமுனி வாசல்ல கூட்டத்தப் போட்டு. நம்மலேப் பேசி முடிச்சி, ஒத்தக் கருத்தா ஒரு முடுவோட, நாளைக்கி கிராமம் கூட்டுற பஞ்சாயத்துக்கு போவோம்" என்று மாணிக்கம் சொன்னான்.

"நீ சொல்லுறதல்லாம் சரிதான் பெரியப்பா..."

"பெரச்சனேனு ஒண்ணு வந்தப்பெறவுதான் பங்காளிகளை யெல்லாம் இன்னக்கித்தான் உங்களுக்கு கண்ணுக்குத் தெரியுதா?"

"ஆயிரம் பெரச்சனே நமக்குள்ளேயிருந்தாலும், பெறத்தியானுக்கு நாம எடம் கொடுக்கக்கூடாதுடா"



"பங்காளிகளை வெட பெறத்தியான், எனக்கு எவ்வளவோ தேவல?"

"மாடு மேஞ்ச சண்டைக்கெல்லாம் முள்ளங்குறிச்சி மாரியம்மன் கோயிலுலே மண்ணவாரி எரச்சா? எங்க வமுசமே மேலக்கி, இல்லாமப் போயிரனுமுன்னு. கரைமுனி கோயிலெ படிக்கட்டி, காச வெட்டி போட்டுப் பொதச்சா?"

"நீ பெத்த மூணுப்புள்ளேயும் ஒனக்கு ஒட்டாமே போயிரும். ஒனக்கு கொள்ளி வைக்கக் கொட ஒரு நாதியிம் இருக்காதுன்னு இராங்கியன்விடுதி ஆண்டாங்காளியே கட்டிப்புடிச்ச?"

"சாண்டக்குடிக்கிப்பயலல்லாம் ஏன் ஊட்டு வாசல்லதான் பாதப் போகணும். ஏன் மூத்திரத்த தான் அப்போ மொடக்கு, மொடக்குன்னு குடிக்கணும். அப்போ... புள்ளப் பெத்த வெளக்கமாத்தே எடுத்து ஒன் மொகரையிலே நான் அடிக்கல? நான் முந்தானைய பலப் பேருக்கு போட்டவனு நெளச்சிக்கோ"ன்னு சங்கரன் பொண்டாட்டி திட்டினாள்.

"நாளைக்கி பங்காளிக வேணும், வெளையுமுன்னு அவ நெனச்சிப் பேசலே, செத்த சாவக்கூட ஒதுக்கிப்புட்டா, பொனம்போறப் பாதையில சூரமுள்ள வெட்டி வைச்சி அடைச்சா, பெரியப்பன் மவன் சங்கரன் நல்ல மனுசங்கிறதுனால நான் பொறுமையா ஒதுங்கிப் போயிட்டேன்..."

"நம்ம வம்சகுருவப் பத்தி அவளுக்கென்னடாத் தெரியும், எங்கேயோயிருந்து அடுப்பெரிக்க வந்தவளுக்கு. நம்ம ஒரு தாய் புள்ள, ஒரு கொடலுல கெடந்தவுக, நெஞ்சத்தடவாதடா நொண்டியா மேலக்கி எல்லாரும் நல்லாயிருக்கனும்".

"வெறியராண்டி வாசல்லே ஒரு தேங்காச்சில்லே ஒடச்சி சாம்பலே பூசிக்கிட்டு, ரெண்டு ஊட்டு, நீராத்தண்ணியை ஒண்ணா ஊத்தி, கலக்கி ஆளுக்கு கொஞ்சமா வாயிலே ஊத்திக்கிட்டு, மொறப்பாட்ட தீத்துக்கிருவோம்" என்று சொன்னான் மாணிக்கம்.

"இது நேத்து இன்னக்கி நடந்த விசயம் மட்டுமில்லே பெரியப்பா? காராலவுள்ளவன் காலத்துலேருந்தே... திட்டி மொறப்பாடு, பச்சக்கள்ளிய வெட்டுனது, வேட்டிப்போட்டு தாண்டுனதுனு ஒரு வாக்கு தத்துவமே நடந்துயிருக்கு. 'நீ ஸ்ரீரெங்க வாசல் போனாலும்

தீராது'னு. முன்னடியான் கோயில் பூசை போடுறதுக்கு. குறிபாக்க போனப்போது? சுக்கிரன்விடுதி ஆணையன் பூசாரி சொன்னான்".

"எல்லாம் பொம்புளயால வர்ற பெரச்சன? அவனவன் பொண்டாட்டிய ஒழுங்கா வைச்சியிருந்தா, ஏண்டா நம்ம பங்காளி இன்னக்கி சுக்குநூறா ஒடஞ்சிக் கெடக்குறான்".

"போற எடத்துலே நகையையும், வண்டியையும் பத்தியேப் பேசாம, நாளுப்பேருக்கிட்டே நல்லா விசாரிச்சி அவ கொலம், கோத்திரம் அறிஞ்சி, அவ படிக்கலனாக் கூட பரவாயில்லே, நல்ல குடும்பமா? நம்மக் குடும்பத்துக்கு ஏத்த மாதிரி, பொண்ணெடுங்கடானு சொன்னேன்".

"எனக்கு செவப்பு தோலுதான் வேணுமுன்னு எங்கையோக் கெடந்த காடேரி முண்டையல கொண்டாந்து வச்சிக்கிட்டு, இன்னக்கி... குத்துது, கொடையுதுனு அழுவுறாங்கெ...?"

"இது நாளதாண்டா... பக்கத்தூரு மேலக்காடு அம்புலாரன்கூட நம்ம ஊர மதிக்க மாட்டங்கிறான்" என்று சின்னான் கிழவன் தலையிலேயே அடிச்சிக்கிட்டான்.

"சங்கரன் மவன் கோயிலுலே இழுத்தப் பெரச்சனே, மாடக்காளி மாறி, இன்னிக்கி ஊரே சுத்தி வருது".

"எம் மவன் பண்ணுன தப்புக்கு, ஊரு எந்த முடுவு எடுத்தாலும் அதுக்கு நான் கட்டுப்படுறேன், என்னால யாருக்கும் எந்தக் கஷ்டமும் வேண்டாம், என்று நீருலே நீந்துன மீனு, சாக நெலத்துலே துள்ளன". வெறிச்சோடிப்போயி கிழக்கு முகமா பார்த்து நின்னுக்கிட்டு சொன்னான் சங்கரன்.

"கொஞ்சம் பொறுய்யா..."

"களச்சங்காடு கிருஷ்ணன், வேறஆளுயில்ல வாழைக்கி ஒரம் வைக்கனுமுன்னு கூப்புட்டாப்புள, நான்தான் ஊருல ஒருப் பெரச்சனைனு சொல்லிப்புட்டு போகாமே... காலையிலேருந்து ஒனக்காகத்தான் நிக்கிறேன்".

"அப்பறம்..."

"ஊருல நடக்குற ஒவ்வொரு விசயத்தையும் கட்சி அணுவணுவா கவனிச்சிக்கிட்டுதான் இருக்கு".



"ஒன் விசயத்தே கட்சியிலே மாவட்டச் செயலாளர் வரைக்கும், கொண்டுப் போயிருக்கிறேன், தலையீட்டுப் பேசுவோமுன்னு சொல்லியிருக்கிறாங்க".

"ஊருக்காரங்க இதுக்கு ஒத்துக்கிர மாட்டாங்களே?"

"நம்ம ஊருக்காரனப்பத்தி நீ எங்கிட்டே சொல்லாதே?"

"ஆளுக்கொழுத்தா அங்குட்டும், அரசன் கொழுத்தா இங்குட்டும் நிப்பான்".

"ஒரு கிளாஸ் சாராயத்துக்காக... ஒரு ஒறவுப் புடிப்பான், பண பலம் பாப்பான்? ஆள் பலம் பாப்பான்? சாராயத்தை வாங்கிக் கொடுத்து பத்தலனா, கோஷ்டிச் சேப்பான்? ஆனா, கட்சி ஒன் ஒருத்தனுக்காக, ஞாயத்துக்காக, எப்போவும் யாருக்கும் நெலயா நிக்கும்".

"பணமுதலக் கட்சிக ஒருத்தன, ஒருத்தன் தூக்கிப்போட்டு முழுங்குற இந்த காலத்துலே... உண்டியல் குலுக்குற ஒன்கட்சி எப்படி என்னை காப்பாத்தும்?"

"பழனியிலே முருகன் ஆண்டியாத்தான் இருக்கிறான். ஆண்டியாயிருக்குறவன்கிட்ட 'வரம்' கேட்டு தினம் ஆயிரக்கானக்கான சனம் போறதில்லையா".

"ஆண்டியாயிருந்தாலும்... ஆண்டியாயிருந்துகொண்டே ஒலகத்தை அசைச்சிக்காட்டுரவன்தான் வீரன்!" என்று சங்கரன் முகத்தை பாத்து நல்லா உரைக்கிறதுமாதிரி மாரி சொன்னான்.

"அப்புற ஒன் இஷ்டம்".

"நாங்களும் கட்சியிலதான் இருக்குறோம்...?"

"எந்தக் கட்சியில?"

"எந்தக் கட்சியில இருந்தா ஒனக்கென்ன? 'ஒன்' கட்சி. இந்த ஊருக்கு இதுவரைக்கும் என்னச் செஞ்சிச்சினு மொதல்ல அதைச் சொல்லு" என்று சங்கரன் பக்கத்தில் நின்னுக்கொண்டிருந்த சோனாபானா ரவி. துள்ளுனதும், மொத்த பேரும் அவனை பார்த்து முறைத்தார்கள்.

"அண்ணாச்சாமி தேவன் குதிரேமேல ஏறி வந்து. நம்ம தெரு, பொம்புளையல 'கண்டாங்கி சேலைய கட்டுங்கடி கண்டார ஒழியலா, கரட்டுக்காலுக்கும் மேலனு' சாட்டையாலே அடிச்ச ஊருடாயிது".

"நீயெல்லாம் இன்னைக்கி... வெள்ள வேட்டியக் கட்டிக்கிட்டு நாக்குமேல பல்லப் போட்டுப் பேசுரியன்னா யாருடாக் காரணம்? கட்சிடா... கட்சி!"

"பழைய ஆளு, காட்டுவிடுதியார கேட்டுப்பாரு. இந்த ஊருக்காக கட்சி பண்ணுன தியாகத்த கதை கதையாச் சொல்லுவாரு!" என்று ஆத்திரப்பட்டு பொங்கி எழுந்தான் மாரி.

"சரி விடுப்பா... அவென் தெரியாம பேசுறான்".

"நீ சும்மா இர்ரா மைரான், ஒனக்கு ஒரு எழவும் தெரியாது?"

"தெரியலன்னா, கேட்டுத் தெரிஞ்சிகிறனும்".

"மனுசனை, மனுசனாப் பாத்தது யாரு? மனுசனை மனுசனாக்கியது யாரு? கொடலுல இருக்குறதெல்லாம் கொழுப்புன்னு பேசக்கூடாது" என்று சீறிப்பொங்கி அமைதியானான் மாரி.

"அட கட்சிய விடப்பா..."

"இந்த ஒரு விசயத்துக்கே, நம்மளால ஒண்ணு சேர்ந்து, ஒரு நிமுசம், ஒரு எடத்துல நிக்க முடியலயே? அப்புறம் எப்புர்றா நாம, மேஞ் சாதிக்காரனெ எதுக்குறது?"

"நாம என்னப் பேசி முடிக்கிறமுன்னு, ஒண்ணும் தெரியாதவன் மாறி, ஒக்காந்துக் கேட்டுக்கிட்டுப் போய் மேஞ் சாதிக்காரங்கிட்டே, ஒண்ணு விடாம சொல்லிப்புட்டு அவன்முட்டப்புடிச்சி ஊம்புர அவுசாரி மவன் இன்னும் நமக்குள்ளே இருக்கத்தானே செய்யுறான்?"

"வாங்கி குடிச்சப் புத்தி இன்னும் நம்மளை விட்டுப் போகலேயே?"

"ஆயிரத்தெட்டுப் பெரச்சனே அவனுகளுக்குள்ளேயிருந்தாலும், ஒரு பெரச்சனேனு வரும்போது, அவன் சாதியாக் கூடுறான்".

"நம்மாளு ஞாயத்துப்பக்கம் நிக்கவே நக்குறானே".



"நம்மக்கிட்டதான் பெரிய வீராப்பு மசுராப் பேசுறான். அங்கேப் போனதும் கோமணத்தே கட்டிக்கிட்டு அய்யாக்களுக்கு குண்டியத் தாங்குறான்".

"ஒரு மயிராயிருந்தாலும் சொனே மயிராயிருக்கனுமுண்டா" என்று சின்னான் கிழவன். "ச்சீ... எல்லாம் தொடநடுங்கிப் பயலாயிருக்குறான்... பொட்டச்சியா மாறி சீலையே எடுத்து கட்டிக்கிட்டு திரிங்கடா" என்று குண்டி மண்ணை தட்டிவிட்டு விரக்தியில் எழுந்துப் போனான்.

"யோவ் பெருசு நீனேப் போனா எப்படியா?"

"ஒங்க பொட்டப் பஞ்சாயத்து எனக்கு புடிக்கல"

"கெழவன், சாதிவெறி தலவிரிச்சி ஆடுன அந்தக் காலத்துலேயே அம்பு நாடு ஒம்பதுக் குப்பத்தையும் எதுத்துக்கிட்டு தனியா நின்னு ஏறுக்கட்டுனவன்".

"நம்மாளுக, செருப்புப் போட்டுக்கிட்டு நடக்க முடியாத அந்தக் காலத்துலேயே தோள்ல துண்டப் போட்டுக்கிட்டு ஜில்லாக் கலெக்டரயே நிக்க வச்சி கேள்வி கேட்டவன்".

"கண்ணு மங்கிப் போச்சி, காதும் சரியாக் கேக்க மாட்டேங்கிது. ஆனாலும், இந்த தாளாத வயதிலும் கம்பெடுத்து ஊணிக்கிட்டு, ஊருல ஒரு பெரச்சனேனா? முன்னுக்கு வந்து நிக்கிறான். இந்தக் காலத்து எளவெட்டப் பயலுவளுக்கு எங்கே, இதெல்லாம் தெரியப் போவுது?"

"நுனி நாக்குல இங்கிலீசுப் பேசுறான்... ஊரோட முழு வரலாறு தெரியாமே?"

"எல்லாம் தெரிஞ்சதுமாறி... பெரிய மனுசங்கெள மதிக்க மாட்டேங்கிறாங்கே?" என்று செவந்தாயி கெழவி, வைரமாக்காகிட்டே சொல்லிக்கிட்டு அந்தப் பாத வழியா நடந்து புல்லறுக்க போனாள்.

"சாகப்போற காலத்துலேயும் கெழவனுக்கு பழைய வீராப்பு கொறையலே"

"ஊருலே பெரிய வீரனா, தியாகியாயிருந்தாலும், ஊட்டுலே பெத்த புள்ளயே யாரும் கெழவனே மதிக்க மாட்டங்கிதே?"

"ஏன் கெழவி?"

"ஒரு புள்ளயே பெத்தவனுக்கு ஒரு சட்டிலே சோறு, நாலுப் புள்ளயே பெத்தவனுக்கு நாய் சட்டில சோறுனு, நாலு மக்களப் பெத்தவன் ஒரு வேளக் கஞ்சிக்கே நாயா அலையுறான்".

"சொத்து சம்பாரிச்சி வைக்கலயாம்?"

"பொண்டாட்டிப் பேச்சைக் கேட்டுக்கிட்டு ஊரு வேல பாக்குற உனக்கெதுக்கு சோறுனு, கெழவன கை கழுவிட்டாங்கெ" கெழவன நெனச்சி கவலைப்படர்ந்தவளா, அந்த ஒழுங்கைப் பாதையிலேயே திக்குச்சிப்போய் நின்னா வைரம்மாக்கா.

மினிபஸ் முக்கம் வந்து திரும்பி ஹாரன் அடித்ததும். எல்லார் பார்வையும் அதை நோக்கி நகர்ந்தது, யார் பஸ்ச விட்டு இறங்குறதுன்னு பார்க்க.

யாரோ அஞ்சாறுப்பேரு தனியா ஒரு கூட்டமா குசுக்குசுன்னு பேசிக்கிட்டு இருந்தாங்க, 'யாரோ டைலர் தம்பியாம், மழையூருக்கு... இவ டைலர் கடைக்கி போனாளாம்' என்ற சேதி மட்டும்தான் லேசா காதுல விழுந்துச்சி, அதுக்குள்ளே,

"யாருப்பாது...? தனியா, அங்கே ஒரு கூட்டம் போட்டு பேசுறது?" என்று செவில் கிழிய சவுண்டா வந்தது ஒரு வார்த்தை.

"என்ன மாமா?"

"நாங்க இங்க என்னப் பேசிக்கிட்டுயிருக்குறோம், எவனோ எப்படியோ போறான்னு நீங்க போயி தனியா நின்னுக்கிட்டு, நீங்க ஒண்ணு பேசுனா எப்புடி?"

"அது வேற விசய மாமா, சீரழிஞ்சிசெத்த விமலா கதயப்பத்தி".

"பள்ளத்தான்மனை விமலாவா?"

"ஆமா..."

"நம்ம ஊருக்கததான் ஊருப்பூறா நாறிக் கெடக்கே, நமக்கெதுக்கு பக்கத்தூர் கதயெல்லாம், ஒழுங்கு மரியாதையா உள்ள வேலையே பாருங்க"னு அந்த பையனோட மாமா அதட்டுனதும் அந்தக் கூட்டம் கலைஞ்சி வந்துருச்சி.



ராவு வெளக்கு வைச்சாச்சி. வெசயம் வழவழனு இழுத்துக் கிட்டேப் போவுது. ஊரு, பங்காளினுப் பேசுறது எனக்கு சரியாப் படல. ஊருக்குள்ளே நம்ம மட்டுமல்ல, மத்த பட்டத்தாரியளும், மாமா மச்சாங்களும், இருக்குறாங்க, பொண்ணு கொடுத்துயிருக்குறோம், பொண்ணு எடுத்துயிருக்குறோம்.

அவுங்ககிட்டையும் ஒரு வார்த்த சொல்லி கலந்துக்கிறதுனால ஒண்ணும் தப்பில்ல, நாளைக்கி, போலீசுக் கேசு கீசுனு வந்துட்டா? ஒரு பயலும் நிக்கமாட்டான் எல்லாம் துண்டக்காணம், துணியக் காணமுன்னு ஓடிப் போயிருவான்.

நெஞ்சிலே ஆயிரத்தெட்டு வஞ்சகத்த வைச்சிக்கிட்டு எல்லாம் ஒப்புக்கு, ஒப்பரவுக்கும் வந்து நிக்கிறாங்கெ.

அடுத்ததா, பஞ்சாயத்து தேர்தல் வரப்போவுது, பஞ்சாயத்து தேர்தல்குள்ள பகைய தேடிக்கிட்டா ஓட்டு போயிரும் முன்னு 'ஊருக்குள்ளே நான்தான் ஆளு'னு பேசுறவன்னல்லாம் முழுந்துறான்.

"ஒருத்தனுக்கொருத்தன் கொல பண்ணிக்கிறது மாறி நம்மக்குள்ளேயே சிண்டு முடிஞ்சிவிட்டு, நல்லாப் போட்டுகிறட்டும் முன்னு வெளியே நின்னு வேடிக்கப் பாக்குறான் மேஞ் சாதிக்காரன், இதுத் தெரியாமே நொண்டி மவன் ஆர்றான்".

"இதே நான் சொன்னா? 'ஒண்ணாலதாண்டா இந்த ஊரு கெட்டது'னு என்னத் தூத்துறாங்கெ".

"பாம்புக்கு தலய காட்றதும், மீனுக்கு வாலக் காட்றதும்மாயிருக்க என்னால முடியாது".

"எதுக்கும் சங்கரன்கிட்ட அரிதியிருதியா அவென் முடிவக் கேளுங்க? அப்பறம் பேசுவோம், நாளைக்கி வந்து எங்க குடியான ஊடு, எங்க அய்யா ஊடு நாங்க ஒண்ண மண்ணப் போயிருப்போம்"

"ஏன், உள்ளவந்தான் என் குடியக் கெடுத்தான்னானு... நாளைக்கி, அந்த பழிச் சொல்லுக்கு நாம ஆளகாம?" என்றதும்.

"என்னப்பா சங்கரா..."

"சக்கரண்ணே சொல்றதெல்லாம் நல்லாக்காதுல விழுவுதா?"

"ம்... ம்..."

“நல்லா வாயத் தொறந்து பளிச்சினு சொல்லுயா?, செலம்பக்குடி முனி மாறி செவனேனு நிக்காமே”.

வானத்த பாக்க வளர்ந்து வானம் பாக்கவே வாடிவிழும் பயிரைப்போல வாடி நின்று சொன்னான் “குடியானவன என்னாலே எதுக்க முடியாது?”

“பாருய்யா?”

“காலயிலே அவென் வாசல்ல போயி முளிச்சாத்தான். ராத்திரிக்கி என் ஊட்டுல ஒல வைக்கலாம்”.

“இதான் ஒன் முடுவா?”

“ஆமா”

“மூணாம் வருசம் என் ஆயா தவறிப் போச்சி, கட்டத்தளச் செலவுக்கு வாங்குனப் பணத்த, இன்னும் வேல செஞ்சியே கழிக்க முடியல?”

“ராங்கியர் ஊட்டு வண்டிமாடு பாஞ்சி, பதிமூணெல விளாவுலப் போட்டு, மூணு மாசமா படுத்தப் படுக்கையா கொட்டாயில கெடந்தேன், எந்தச் சாதிசனமும் எட்டிப் பாக்கல”.

“தெய்வான ஆச்சி கொடுத்துட்ட மொய்க்குறுணாவப் போட்டு எரிச்சிதான், மூணு மாதபொழுத கடத்துனம்”, என்று திக்கி திக்கி தடுமாறி ஒவ்வொரு வார்த்தை விதுர்த்தான் சங்கரன்.

“ஒன் பொறந்தவளுக்கு ஒன்சேதி தெரிஞ்சிருந்தா இன்னேரம் கதறிக்கிட்டு வந்திருப்பா? நீதான் ஒறவே... அறவே, வேண்டாமுன்னு அறுத்துப்புட்டியே? மொதல்ல ஒன் பொண்டாட்டி வாய்த் துமுற அடக்குனா எல்லாம் சரியா வந்துரும்”.

“சுப்பமவன் சம்பாரிச்சி தேடிக்கொண்டாந்து போடுறான். நல்லா தின்னு கொளுத்துப்போயி அவ நோனி துமுறு அடங்காம ஊருவழியில சண்டக்கிபோறா”.

“ஒன்னோட பொறந்தது ஒரே பொட்டப்புள்ளே, அதெ கொண்டுப் போயி நெவெலி நடுத்தெருல கட்டுனியே, அதுக்கெப்புறம் போயி பாத்தியா, கேட்டியா?”



“இருபது வருசமா பெரச்சனயாக் கெடந்தக் கோயிலு, இப்பதான் பேசி முடிச்சி, பூசேப் போட போறாங்கெ”.

“அவளுக்கும் அப்பமுட்டுக் கோயிலுக்கு போகனுமுன்னு ஆசையிருக்காதா?”

“வந்தப் புள்ளய, ஒன் பொண்டாட்டி வா...னுக்கூட ஒரு வார்த்த கூப்புடலையாம், குண்டிய திருப்பிக்கிட்டு தெற்கே போனாலாம்”.

“பூட்டக்கட்டே மாறி பொட்டி கட்டிப் போன புள்ளே, இப்போ, எலும்பும் தோலுமாயிருக்குறா”.

“நொப்பமுட்டுலேர்ந்து என்னடிக் கொண்டு வந்தேனு, தெனமும் குடிச்சிப்புட்டு வந்து கதவச் சாத்திக்கிட்டு ஒட்டுத் துணி இல்லாமே போட்டுக்கிட்டு அடிக்கிறானாம் நெவெலியான்”.

“பச்சக்காரம்மா கோயில் பலகாரப் பூசைக்கி வந்தப்புள்ள, “என்னேக் கண்டுட்டு, ‘என்ன கொண்டுபோய் பாழும் கெணத்துல தள்ளிட்டியேலே பெரியப்பா... என் வாழ்க்கைய எடுத்து வைச்சி மூடிட்டியலப் பெரியப்பா...’ன்னு, என் கால கட்டிப் புடிச்சிக்கிட்டு கதறி அழுதா”.

“பொறந்த மக்க கலங்குனா எப்புர்றா ஒன்குடி வாழும்?”

“எல்லாப் பொறந்த மக்களும் பொண்ணடிப்பானெய வச்சி, சாமி கும்பிட்டுட்டு அததது ஊட்டுக்கு தூக்கிட்டுப் போச்சி.

“இவ மட்டும் அழுது எரஞ்சி ஆறாப்பெருவி, புள்ளய கக்கத்துல ஒண்ணும், கையில ஒண்ணுமா, புடிச்சிகிட்டு புருசனுக்கு பயந்து ஓடுனா... இந்த கோயில் சாம்பலக்கூட அந்த பாலையம் ரெண்டுக்கும் பூசி அழைச்சிக்கிட்டுப் போகாம, பாவி மகப் போனா, பாவம் வயித்தெரிச்சலாயிருந்துச்சி”.

“யாரக் கேட்றி என் ரெண்டுப் புள்ளயல தூக்கிட்டு நொப்பமுட்டு கோயில் பூசைக்கிப் போனேனு, புல்லாக் குடிச்சிப்புட்டு வேப்பமர பஸ்டாப்புல கடப்பாறயோட நின்னானம் நெவலியான்”.

“அதுக்கெப்புறம் அந்தப் புள்ள கத என்னாச்சினே தெரியல”னு சொல்லும் போதே நொண்டியன் கண் கலங்கிட்டான்.

“தான் ஆடாவிட்டாலும் தான் சதுரம்மாடும்முன்னு சொல்லுவாங்க, ரத்தப்பாசம் எல்லோரையும் அழ வைச்சிருச்சி”.

“அடச் சண்டாலத் திருவளத்தே, காரி மூக்கே மக்க தலையில இப்படியா எழுதியிருக்கான்.. முண்டம்புடிச்சிப் போட்டவன்”.

“யாரு வெச்ச தீ வினையோ இன்னைக்கி நம்ம குலக்கொடியே சுத்துது... நல்லகங்காறனப் பார்த்து, ஒரு பார்வ, பார்த்தாலும் தேவல”னு மாணிக்கத்தை பார்த்து சக்கரை சொன்னான்.

மாமரத்து கீழவாதுல பல்லி கிச்சிக் கிச்சினுச்சி!

“என்னப்பா, இங்குட்டு ‘சவனம்’ சொல்லுதே நல்லாயிருக்குமா?”னு மாணிக்கம் சக்கரண்ணெணப் பார்த்து கேட்டான்.

“அங்குட்டுத்தாப்பா ‘தாழடியப்புச்சி’ய வைச்சி வாடக் குடுக்குறோம். அங்குட்டு சொல்லிட்ட நூலுல நடக்கலாம் பயமில்ல, எந்த மொகம் போனாலும் தங்க மொகமாயிருக்கும்”.

“அப்பரமென்ன...”

“தாழடியப்புச்சி மேலப் பாரத்தப் போட்டுட்டு கூட்டத்தப் போடுவோம்”.

“இன்நேரம் குடியானவனுக்கு நம்ம சேதி தெரிஞ்சிருக்கும்...”

ஏற்கனவே கடும் கோபத்தில் நின்ன மாரி, இந்தச் சேதியே கேட்டதும்.

“என்னடா... பூச்சாண்டிக் காட்றியே, தெரிஞ்சா என்னடா? ஏன் மசுரப் புடிங்கிப் புடுவானோ?”

“ஏன் அண்ண தம்பி, ரெண்டு பேரும் டெஸ்ட்டு பாஸ் பண்ணி, ஒவ்வொருத்தனும் மாதம் நாப்பது ரூபா சம்பளம் வாங்குறான் சிங்கப்பூர்லே, எனக்கொண்ணும் கவலையில்ல, எவெ எதுத்தாலும்... அவெங்குடியே, அழிச்சிப்புட்டுதான் ஒக்காருவேன். ஏதோ, பேச்சுக்கு கத்துறான்னு நெனக்காதீங்க? நான் நெசமாவே செஞ்சிப்புடுவேன், நான் அப்படி ஆளு. ஆமா...”

“வெட்டும வேல பார்த்ததெல்லாம் என் அப்பன் பிலிக்குட்டியோட மலையேறிப் போச்சி” என்று பலமா சத்தம் போட்டு நாக்க துருத்திக்கிட்டு கைலிய டவுசர் தெரியும்படி மடிச்சிக் கட்டினான்.



“ராப்பேச்ச பைய பேசுங்கடா... சின்னப்புள்ளதனமா வாய விடாம? காத்துக்கும் காது கேக்கும்!”

“ஒனக்கு பயந்து வந்தா போயி நொண்டியண்ணமுட்டு குருதுக்குள்ள போய் மண்டிக்கெ...”

“நீயல்லாம் அப்பயிலேருந்து குனிஞ்சி... குனிஞ்சிதாண்டா? குடியானவனெல்லாம் இப்போ, எங்க மேலயும் ஏறி நக்கறைக்கிறாங்கெ” என்று சின்னான் பேரன் சின்ன பையன் கேட்டான்.

“நல்லாக் கேளுடா, நாக்கப்புடிங்கிக்கிட்டு சாகுறது மாறி”.

ஒண்ணுக்கு அடிக்க தெரியாதப் பயலெல்லாம். ஒரு வார்த்த கேட்கும் போது... நாண்டுகிட்டு சாகனும் போலயிருந்தது சங்கரனுக்கு.

“ஏதோ, எடுத்தோம், கவுத்தோமுன்னு எதையும் பேசிட முடியாது. குடியானவன அனசரிச்சி நாம போனா தான் நாளும் கூலி வேல செஞ்சி பொழைக்கலாம். நாளுக்கு நாள் இதேகதியா? எவனாவது ஒருத்தன் ஒரு சிலுக இழுத்துக்கொண்டாந்து ஊருக்குள்ள விட்டுப்புட்டு, பயந்து வெளியூரு ஓடிப்போறான், ஊருக்காரன் கூட்டம் வச்சி நம்மல நிக்க வச்சா? யாருடா? கெடந்து பட்டுக்கிட்டு முழிக்கிறது”.

“செருப்பால அடிப்பேன், மொதல்ல ஒன் வாய் மையிர மூர்றா?”

“எப்ப பார்த்தாலும் பழைய பஞ்சாங்கத்தேய திருப்பி திருப்பி பாடிகிட்டு, ஏண்டா நீயெல்லாம் இன்னும் மண்ணுக்கு பாரமா திரிஞ்சி அலையிற, சின்னான் பேரன் சின்னப்பையனா இருந்தாலும், ஒவ்வொரு வார்தையும் நறுக்குதெரிச்சாப்புல கேக்குறான்?”

“அவென் கவட்டிக்கீழ மூணுமொற நொழஞ்சி வந்தாலும் உனக்கெல்லாம் புத்தி வராது” என்று கடவாய் பல் கழண்டு விழுவது மாதிரி கடும் வார்த்தைய விட்டான் மாரி, மறுகணமே...

“இந்த சாதியில பொறந்ததே மொதல்ல தப்புய்யா” என்று ரெண்டுப் பேர் கூட்டத்தை விட்டு எழுந்துப் போனான்.

கூட்டம் கொந்தளித்தது, 'விட்டா இன்னும் ஒரு பர்லாங்கு தூரம் பிரச்சனை இழுத்துக்கிட்டுப் போகும்...' சங்கரன் முடிவு பாதிபேருக்கு சரியாகப் படல.

சங்கரன் தனக்காக நிற்கும் பங்காளிகளின் பேச்சையும், முடிவையும் மீற முடியாமல், தான் குடி வேல பார்த்த மேல்சாதிக்காரனை, ஞாயத்துக்காக எதிர்த்து ஒரு கேள்விக்கூட கேட்க முடியாதவனாயிருந்தான். 'அப்போதெல்லாம் பேசாதவன் இப்போது பேசினால் எழுந்து விடும் சந்தேகம் அய்யாக்களுக்கு' என்று சங்கரன் நினைத்திருக்கலாம்.

'இவனும் அவனுகளோடு ஒன்னுச் சேந்துட்டான். சங்கரன் இனிமே நம்ம பேச்சை கேட்கமாட்டான்' என்று மேல்சாதிக்காரன் முடிவு செய்துவிட்டால், அது சங்கரன் பொழப்புல மண்ணேப் போட்ரும். சங்கரனை ஊரில் சிலர் இயக்கினாலும், பிடி மேல்சாதிக்காரன் கையிலேயேயிருந்தது.

ஆத்துல ஒரு காலும், சேத்துல ஒரு காலும் வைக்கிறவன் நிலை. இப்படிப் போகுமுன்னு அப்போ யாருக்கும் தெரியாது?

கூட்டம் கலைந்து கரையேறிக் கொண்டிருந்தது.

"கடசியா ஒண்ணு சொல்றேன்?"

"நீ ரெண்டு மனசாப் போறே... போ"

"நாளக்கி பங்காளி பாக்கல, வெக்கலேனு எங்க மேலப் பழி சாத்தக் கூடாது? நாலொருப்பாதியாக் கெடந்தவங்கெ, இப்பதான் ஒண்ணு சேந்து ஒரு மொகமா நிக்கிறாங்கெ".

நாளக்கி, சபையிலே எங்க மானத்த காத்துல விட்டுறாத? அப்புறம், ஏழுருப் பொல்லாப்பு வந்து எங்களச் சேந்துரும்னு தான் பெரும் பங்காளி செல்லதுரை சொல்லுவதை ஒரு பக்கக் காதில் போட்டுக் கொண்டே முன்னங்கால் பின்ன முழு வேகமா நடந்தான் சங்கரன்.

முழுநிலா முற்றத்திலிருந்துப் பாத்துக் கொண்டேயிருந்தது...

மிளகாய்க் கொல்லை, கத்திரிக் கொல்லை, கடலைக் கொல்லை என்று பாராமல், நடுவில் புகுந்து, ஒரு கரடுமுரடானப்



பாதையெல்லாம் ஒரு நதியை போல் சீறிப் பாய்ந்து சிலிர்த்து எழுந்து போவதுப் போல போனான்...!

அவன் போன பாதை யாரும் போகாத பாதை, அவன் போட்ட புதுபாதை, அவன் போன பாதை, அவன் போன பாதையில் நாம் போய்ப் பார்த்தால்... அவன் போனத் தடம் தெரியும்!

அது சாமிப்போகும் பாதை, குளிச்சவுக, முழுகுனவுக, யாருமாயிருந்தால் அந்தபாதையில் பயந்துப் போக மாட்டார்கள். பங்குனி பதினைஞ்சி தேதிக்கு மேல உச்சிப் பூசை போட்டாச்சுன்னா? அந்தப் பாதையிலதான் சாமி பாச்சல்ல நிற்கும். 'கூத்தாலுக்கு கூச்சல் முடியுரவரைக்கும் எவனும் ஒரு தல வெச்சி படுக்கப்புடாதுடா' அப்புறம் 'வம்சம் விருத்தியாகாமே, அழிச்சிப்புடுவா'னு காலம் சென்ற காப்புக்கட்டி வடிவேலுக் கெழவன் அடிக்கடி சொல்லுவானாம்.

அய்யாப்பிள்ளை வீட்டு வாசல் மரியக் கொட்டல் வந்ததும், ஒரு நாழி திகைத்து நின்னான் சங்கரன். மனசு படபடவென்று அடித்தது. ஒருவிதமான பயம் உடம்பெல்லாம் வேர்த்து கொட்டியது. வந்தப் பாதைய திரும்பி மேற்கு முகமா அரிசிக் கோயில பார்த்து கைய மேலத் தூக்கி கும்பிட்டான்.

'லொள்ளு'னு ஒரு கருப்பு நாய் குலைத்தது. யாரோ, மாற்று ஆளு தான் பாதுகாப்பு எல்லைக்கு வந்துவிட்டானென்று எண்ணிக் குலைத்துருக்கும். அந்த நாய் சத்தம் கேட்டதும், பூசாரிதெரு மொத்த நாயும் குலைக்க தொடங்கியது ஒவ்வென்றாய்.

யாரும் டார்ச்லைட்டை அடித்துக்கொண்டு வந்து 'யாருப்பாது'னு கேட்டால்? என்னவென்று சொல்வது? என்று நினைத்துக் கொண்டே....

மறு வேகத்திலயே நடையைக் கட்டினான். பசி காதை அடைத்தது, கால்களை பின்னியது, வரப்பு ஓரம்... இடுப்பு உயரம், வளர்ந்து பூத்து தளர்ந்து கிடந்தது செவ்வந்தி பூச்செடிகள்.

ராசி வீட்டு தென்னந்தோப்பு முக்கம் வந்ததும், திரும்பி பொசுக்குனு பின்னாடி பார்த்தான், வந்த பாதையை... யரோ ஒரு பொண்ணு தான் பின் தொடர்ந்து வருவதுபோல் உணர்ந்தான். இந்த நேரத்தில் இங்கே எளம்பொண்ணு நடமாட வாய்ப்பில்லை.

ஆனாலும் ஊரில் நடந்த பல சம்பவங்கள் அவனுக்கு சந்தேகத்தை கிளறியது.

பூசாரிதெரு விஜேந்திரா. சின்ன வயசுலேயே தாய எழந்து வளர்ந்தபுள்ள. அவ அம்மா ஒட்டுத் தண்ணி ஒட்டப் போய்... அய்யாப்பிள்ளை வீட்டு கெணத்துலே தவறி விழுந்து செத்துப்போனா. வாழை எல அறுக்கப் போன அவ அப்பன் வர்றத்துக்குள்ளே எல்லாக் கதையும் முடிஞ்சி போச்சி.

"அவ அம்மா மாறியே, அவளும் கெணத்துக்குள்ளே விழுந்து செத்துப் போயிட்டாளே... செரிக்கி மவ"னு ஊரே மூடி மறைச்சி அழுதுச்சி, உள்ளத்தை சொல்லாமல், தீத்தான்விடுதி பாய்யாவாரி காசி மவளக்கொல்லனே... கொன்னு. யாருக்கும் சத்த கேட்காமே ராவோடுராவா கெணத்துலே எறக்கிட்டாங்கெ பாவியேனு. அவளப் பெத்தவன். நெஞ்சிலேயே குத்திக்கிட்ட குத்தும், வாசல்ல விழுந்து புரண்டு கத்துன... கத்தும். ஊருக்கு கேட்டுச்சோ, இல்லையோ? ஊர காவக்காக்குர காவக்காரமுனிக்கு அந்நேரம் கேட்டுருக்கும்.

விஜேந்திரா மாரியேதான், வந்ததுபோல தெரிந்தது அவனுக்கு.

மஞ்சள் முகமும், மருதாணி உதடும் ஆலம் விழுதுப்போல் அவள் அள்ளி முடிந்தக் கொண்டை முடி ஒன்று காதோரம் சிலிர்த்துக் கொண்டு நின்றதும், அவதான் என்றே மனம் உறுதி செய்தது. ஆனாலும் 'இறந்தவள் எப்படி உயிரோடு வர முடியும்?' பயம் தரைத் தட்டியது.

எலக்குலுங்காத... உரும நேரம். தான் சுதாரித்து கொண்டவன் போல பொசுக்குனு "யாரது"னு கேட்டான் சங்கரன்? அவன் சத்தம் அந்த தென்னதோப்பையே எதிரொலித்தது. நான்தான் வாரேன். என்று சொல்ல அங்கே யாருமில்லை.

தான் வீட்டு விளக்காயிருந்தாலும் சுடத்தான் செய்யும். சாமி கௌம்பி வர நேரமிது. சாமிக்கு சன்னதியை விட்டு விலகி வேகமாய் முழுமூச்சா முன்னே நடந்து கூத்தாளம்மன் கோவில் போய் முன்னடியான் சாமி சன்னதியில்... நெடுஞ்சான் கரைய விழுந்தான் சங்கரன்.

பதினோறடி மூணு சுத்து, வெட்டருவாளோடு... சிவப்பு துண்டு வலதுப்பக்கம் சிங்கு விட்டு கட்டி. விகாரமாய் உருட்டி மேமுளி முழுச்சி, கண்கள் ரெண்டும் அக்கினி கக்க, கம்பீரமாய் மேற்கு



முகமாய் வெறிச்சி பாத்தவாறு, முறுக்கு மீசையிலே ரத்தம் தெரிக்க, நாக்கை ஒரு முழம் துருத்தி மடுச்சிக் கடிச்சிட்டு மொத்த நரம்பும் புடைத்து விடைக்க காவுவாங்கும் கண உச்சத்தில், கடும்கோபமாய் வீறு கொண்டு நின்னான் முன்னடியான்.

*கூத்தாயிக்கு ஒரு ஆபத்துனா? முன்னே ஓடிவந்து காக்குறவன்,*
*முன்னே வந்து ஆடி முன்சேதி சொல்லுறவன்,*
*ஊருக்கு ஒரு ஆபத்துன்னா முன்னேச்சரிக்கை செய்யுறவன்.*

*அவன் நடந்தால் நடை குலுங்கும்! நாதமணி ஓசையிடும்!*
*அதனால்தான் அவனுக்கு முன் சந்தனம், முன் படையல்,*
*முன் முழக்கம்முன்னு ஒரு வழக்கமாய் வருடம்தோறும் நடக்குது.*

*மல்லிப்பூ சரம் தொடுத்து, ஒருத் தோளுக்கு ஏழு சரம் விட்டு,*
*சிகினா வச்சிக் கட்டி, தலைக்கும் காலுக்குமாய் தகத்தகனு கெடந்துச்சி,*

*கணத்த வெட்டருவா பளபளனு கண்ணப்பறிக்க,*
*கருக்கு மழுங்காம வெங்காயத்தை சின்ன சின்னமாய் வெட்டி*
*ஏத்திசொருகி காவு வாங்க கண கச்சிதமாய் ஆயுத தளவாடங்களுடன்*
*புறப்பட தயாரா நின்னான் முன்னடியன்.*

தோள்ல கசங்கி கெடந்தத் துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக்கிட்டு, மண்ணுல மண்டியிட்டு, அண்ணாந்து முன்னடியானைப் பார்த்து, கை ரெண்டயும் தலைக்குமேல தூக்கி கையேந்தி நின்னான் சங்கரன்.

பெரியக்குளம் பெருகி கழுங்கு கடைசிப் போகனே...

கண்ணீர் தாரைத்தாரையாய் போனது அவன் கண்ணிலிருந்து...

*மாஞ்சக்காடு மயானக் கரையிலே...*
*தெற்க தல வெச்சி நான் கவலையாய் படுத்து கெடந்தப் போதுக்கூட,*
*தலமாடுத் தட்டி ஏண்டா கவலப்படறே?*
*நான் இருக்குறேன்னு தலமாடு நின்னு காத்தத் தெய்வம் நீ.*

எள்ளுக்காய் முள்ளு முறியாமே என் குடியே காவந்துப் பண்ணுணியேனு மண்ணுலே கெடந்து தரைய தடவுனான்.

*வடக்கே பார்த்து நின்னக் குதிரையிலே*
*'கெவலி' மளமளனுச் சொன்னுச்சி!*

*ஓகோ... அம்மா!*

வாழ்ந்த சோலையாம், குளிர்ந்த வனமாம் வாழ்க கொளந்திரான்பட்டு!
சிறுகனுக்க முடிஞ்ச மழையை தொடுத்து விட்டாளாம் கூத்தாயி!

வைகாசி வளர்பிறையில் வடிவழகி கூத்தாயி குடை மிளகாய்
கொல்லைவழியா மண்ணடியில் கொலுவில்லிருக்க வருவாளாம்!

செத்திக்கெடக்குமாம் ஒரு பலகை
செத்தாமல் கெடக்குமாம் ஒரு பலகை
செத்தி, சித்திரமெழுதி தெருவோரம் புறப்பட்டாளாம் கூத்தாயி!
பிள்ளையாருக்கு போடும்தோப்புக்கண்டமாம், விடிய... விடிய,
வேர்க்க வேர்க்க அடியேன் போடும்தோப்புக்கண்டமாம்!

சேர்ந்த காலுக்கு செலம்புயில்லைனு,
தெருவோரம் புறப்பட்டாளாம் கூத்தாயி!

கொள்ளிடம் காவிரிலே மூனேறு கட்டி,
மூனுவிளாக் கோலி – அதைக் கண்டமும், துண்டமுமாக்கி,
ஒண்ணு, ஒண்ணு சொன்னதுபோல ஓசையடக்கி நிக்காமே,
கட்டுக்கலங்காமே காவலுக்கு துணைநின்னு
தெருவெல்லாம் ஒன்னாக்கி திருவிளக்கு ஏத்தி வைச்சாளாம்
சோழநாடு கொண்ட கூத்தாயி!

ஊர கோலி ஊர கோலி
என்னபெத்த கூத்தாயி!
சங்குபெத்தா, சரப்பிலி பெத்தா, சன்னப்பின்ன
தாவணிப்பெத்தாளாம் கூத்தாயி!

கண்டமும், துண்டமும் எங்களோட
நீங்கப் போங்க பெரிய கோயிலுக்கு...
நாங்க போறோம் காப்புமுனி வாசலுக்கு! என்று.

காப்புக்கட்டி, காத்தான் பாடி வாழ்த்த, அம்மாசிக் கோவணத்தைக் கட்டிக்கிட்டு, அந்த வெள்ளித் தலைமுடியை அள்ளி கொண்டை போட்டுக்கிட்டு, கங்காணி முத்துப்பிள்ளை பில்லித்தண்ணியெ எறச்சதும், அத்தோடு முடிஞ்சிப் போச்சி அந்த வருசத் திருவிழா.

நடந்து முடிந்த பழைய திருவிழாவையெல்லாம் குதிரையப் பார்த்ததும்... கண்ணுக்கு முன்வந்து நிழலாடியது சங்கரனுக்கு.



திருவிழாவில் எவ்வளவுப் பெரியக் கூட்டமிருந்தாலும் எத்தனை பக்தன் மிகச் சுமையோடு நம் வாசலுக்கு வந்துருக்கிறான் என்று சாமிக்கு மட்டும்தான் தெரியும்!

காட்டுக் கொல்லையார் வீட்டுப்பக்கம், நாய் குலைக்கும் சத்தம் கேட்டது? அதுரொம்ப நேரம் கேட்டது... ஒரு விளக்கு வெளிச்சத்தை பார்த்து, அதையே சுத்தி சுத்தி வந்து நின்னு சல்லு... சல்லுனு குலைத்தது, ரொம்பநேரம் பொறுமைக்கு பிறகு 'அது என்னதான் என்று பாத்துருவோம்' மென்று

"யாரது...?" என்று காட்டுக்கொல்லையார் மகன் ரெங்கு வந்து கேட்டான்.

நைட்டு கரண்டுலே... நாத்துக்கு தண்ணிப் பாச்சிக்கிட்டுயிருந்தவன். நிறை முக்காடு போட்டுகிட்டு ஆடு மேய்க்க கீதாரி வைச்சிருக்கும் ஒரு கம்பு மாறி ஒண்ணு கையில வச்சிக்கிட்டு வந்தவ சொன்னா?

"நான்தான்! சங்கரன் பொண்டாட்டி மாரியாயி".

"என்ன? இந்நேரத்துல...?"

"காலங்கார்த்தாலே காப்புக் கொட்டாயிலே எதொப் பேசனுமுன்னு, என் மூத்த கொழுந்தன். எங்கவுட்டாலே வரச்சொல்லிட்டுப் போனாக. காலையிலேயே... வெறும் வயித்துலே நீராத் தண்ணிய குடிச்சிப்புட்டு போன மனுசனே இன்னும் காணம்? சோத்துல வேற இன்னும் தண்ணிவுடல" அரிக்கனெ கொழுத்திகிட்டு சங்கரனைத் தேடி வந்தாள் மாரியாயி.

தண்ணிக்கட்ட வாரேனு நேத்து கடையிலே, வெத்தலை பாக்கு வாங்கும் போது சொன்னாப்புளே, ஆளேக்காணும்? நான் இருந்துருந்துப் பாத்துட்டு இப்போ, நானேக் கட்றேன்.

"அப்போ... இந்த மனுசன் எங்கப் போயிருப்பது...?"

"விடிஞ்சதும் பாத்துக்கெலாம். மொதல்ல நீ ஊட்டுக்கு போ?"

"உரும நேரத்துலே ஒத்தையாத் திரிஞ்சி அலையாமே, காலடியப் பாத்துப்போ... பூரம்பச்ச காடாத்து வேறப் புழுத்துத் திரியுது".

"எங்கவூட்டாலே கண்டா? வெட்டுவாட்டே சின்னாயி மவன் நம்பருக்கு போன் போட்டு சொல்லிருப்பா" நான் கேட்டுக்கிறேன்,

ஒனக்கு ஆயிரமும் புண்ணியமாய் போயிரும்னு ரெங்குவே பார்த்து கையேடுத்து கும்பிட்டா மாரியாயி, வா மடத்தண்ணிலே... கலங்கி விழுந்துச்சி ஒரு சொட்டு உப்புத்தண்ணி, மாரியாயி ரெங்குவப் பார்த்து சொல்லும்போதே... அவக் கண்ணிலிருந்து.

"ஊருலே வாயாடி, பொல்லாதவ"னு இருந்தாலும், "சங்கர மேல உசுரேயே வைச்சிருப்பா", "இந்த விசயத்துல அவ யோக்கியம்", மத்த பொம்புளய மாறி புருசனே வெச்சிக்கிட்டே காடுக் கரையிலே யாரும் இவளக் கண்டதில்லேனு சொல்லுவாக.

மாட்டுக் கொட்டாயி சாப்புலே... கயித்துகட்டுல படுத்துக் கெடந்தான் சங்கரன், வயிறு ஒட்டிப்போய், லாவமும்பெல்லாம் தெரிந்தது.

"என்னங்க... எங்கப் போனியே? எப்போ வந்தியே?"

"வெளக்கு வெச்சதிலேருந்து நானும், காவக்காரன் காட்டுபத்தையெல்லாம் தேடி, காட்டுக்கொல்லையார் ஊடுப் போயி வாறேன்!"

"எங்கேப் போனிய... எப்ப வந்து படுத்தியே?"

"ஏந்திரிங்க...?"

"காலையிலேருந்து அங்கத்துல பொட்டுத் தண்ணி எறங்காமக் கெடந்தா இந்த ஒடம்பு என்னத்துக்காகும்? இந்த அங்கவாரம் தாங்குமா?"

"கண்ணுல குருணி மண்ண கொட்டலாம் போல".

"ஏந்திரிங்க... ஏந்தரிச்சி, மொதல்ல சோத்தத் தின்னுங்க".

நேத்து வெச்ச பிஸ்க்கு கொழம்பெ சுண்ட வச்சி வச்சிருக்கேனு வெளிக்காடெ அலைஞ்சித் திருஞ்சி, புருசனே வீட்டுலப் பார்த்ததும்... மாரியாயி, ஆளாப் பறந்தா!

"எனக்கு சோறு வேண்டாம்? கொஞ்ச நீராத்தண்ணியிருந்தா உப்புப்போட்டு கொண்டு வா..." கலைச்சி வருதுனு நீராரத்தை வாங்கி குடித்து விட்டு, செம்பை மாரியாயிடம் கொடுக்கும் போது, கேட்டான் சங்கரன்:

"எங்க, அந்தப் பய?"



"யாரு?"

"நீ கடசியாப் பெத்தியே ஒரு சனியன்? அவெ எங்க?"

"நீங்க புடிச்சா... பாலடி, பலியடியா அடிப்பியெனு பயந்துக்கிட்டு அவெ அப்புச்சிக்கிட்ட போய் படுத்துக் கெடக்குறான்".

"போயி... அலைச்சிக்கிட்டுவா?"

"வேண்டாங்க? நீங்க வேற கோவமாயிருக்குரியெ? நம்ம வைச்சியிருக்குறதே ஒத்தப்புள்ளயே, உத்து... உத்துப் பார்த்துக்கிட்டுயிருக்கிறோம்".

"அவெந் தூங்குரான்... தூங்கட்டும். எதாயிருந்தாலும் காலம் பொறெப் பேசிக்கெலா"முன்னு மாரியாயி சொன்னாள்.

"பொழுது விடிஞ்சதும் ஊருக்காரன் எனக்கு வலையக் கோலி வைக்கப்போறான், நான் என்ன செய்வேன்?"னென்று கடும் கோபமாய் மாரியாயியை திட்டினான் சங்கரன்.

நாலுப்புள்ளேய பெத்து. மூண மண்ணுலப்போட்டுட்டு. அருவமுன்னு ஒண்ணு வச்சிருக்கேன், இந்த ஊருமுழிப்பட்டுருச்சே...? நின்னுக்குடிகெடுக்க இந்த ஊரான் எட்டுனாப் பட்டினிகெடப்பான், பழிகாரப்பய ஊருடாயிது...னு, மாரியாயி ஒத்தக்கொர ஒப்பாரி வச்சா.

"நீ... ஏண்டி, முண்டே நடுசாமத்துல கத்துரே"

"அந்த வக்காள ஒழியப்போய் அழச்சிக்கிட்டு வாடி...? புள்ளயும் வேண்டாம், ஒரு மசுரும் வேண்டாமுன்னு, வெட்டி தென்னம்புள்ள தூருலப் போட்டு பொதச்சிப்புர்றேன்"னு, சங்கரன் மாரியாயியை அடிக்கப் பாய்ந்தான். நீ கொடுத்த செல்லத்துனால தாண்டி, அவென் கெட்டதுனு.

"ஏண்டா... இப்போ, யாரத்தூக்கிப்போட்டு முழுங்கடா இந்த ஆட்டம் ஆடுற, அவென் சாமிப்புள்ளடா? திருமணஞ்சேரிக் கோயில்ல அவெனத் தெத்துக்குடுத்துருக்கு, ஒருவனே வச்சுக்கிட்டு வெட்டனு கொல்லுன்னு இப்புடி வாய்த் துமுறாப் பேசுரியே, இது கரைக்காளிக்கு அடுக்குமாடா?" சங்கரனைப் பெத்த மலையப்பன், பேரன் சாத்த ஊமையை அலச்சிக்கிட்டு சாமிகொட்டாயிலப்

படுத்துயிருந்தவன் வந்து நடுவாசல்ல நின்னுகிட்டு சத்தம் போட்டான்.

அப்பன் அடிக்கு பயந்து, அப்புச்சிப் பின்னாடி அருணாக்கொடியை யிருகப்பிடித்து நடுங்கி ஒளிஞ்சுக்கிட்டு நின்னான் சாத்த ஊமை.

அம்மா, நான் இருக்குரனல்ல, அப்பா அடிக்காமே நான் பாத்துக்கிறேன்! நீ பயப்புடாமே கிட்டவானு, மாரியாயிதன் மகன் சாத்த ஊமையை நெஞ்சோடு சேர்த்து அணைத்துக்கொண்டு அழைத்து வந்தாள்.

அம்மாவின் முந்தானையை விடாமல், ஒருக்கையில் இருகப் பிடித்துக்கொண்டு, அம்மிக்கல்லு ஓரத்தில், அவன் நின்னக் கோரத்தை பார்த்ததும்... வெள்ளாட்டு கிடா ரத்தம் மாறி கண்கள் ரெண்டும் சிவந்துப்போயிருந்தது சங்கரனுக்கு.

"யாருடா...? ஒண்ணே கோயில்ல வைச்சி அடிச்சது?"

"ம்... ம்..."

"வாயேத் தொறந்து சொல்றனாப் பாத்தியா? குச்சிக்காரி மவென்"னு, ரத்தம் தெரிக்க சத்தம் வச்சான் சங்கரன்.

கோயில்ல நடந்த விசயத்தே, வாயேத் தொறந்து விளாவாரியா சொல்லுப்பா...? இல்லனா நொப்பன் அடிப்பாகனு, மாரியாயி தன் மகன் சாத்த ஊமையை துரிதப்படுத்தினாள்.

அம்மாவின் பாசத்தில் சாதுரியம் அறிந்தப்புள்ளே, வாய் திறந்து சொல்ல முதலடியை எடுத்து வைச்சான்...

"பூசாரிதான்..."

"பூசாரி அடிக்க... நீ என்னப் பண்ணுனே?"

"நீ எனக்கு வாங்கித்திங்க கொடுத்த மூன்றுருவாக்காசே தாம்பளத்துலப் போட்டுட்டு, துண்ணூறெடுத்து நெத்திலேப் பூசுனேன், கீஞ்சாதிக்காரேன் எப்புர்றா தாம்பளத்தை தொட்டு துண்ணூறெடுத்துப் பூசுறது எங்குற, சங்கதியே மனசுலே வைச்சிக்கிட்டு, அத்தேப் பெரியக் கூட்டத்து நடுவே வச்சிக்கிட்டு, ஏன் சோத்தான் கன்னத்துலே காதோடுச் சேர்த்து... ஒரே அரையா அரைஞ்சிப்புட்டாறு, அதுக்கும் பக்கத்துலே நின்ன தாடிக்கார கெழவன் துள்ளிக்கிட்டு வந்து... எப்புறா, தப்படிக்காமே



கோயிலுக்கு வந்திய? 'நாட்டார்' மருவாதேயேப் போச்சிடா?னு அடிக்க பாய்ந்தான்".

"நம்ம தெரு பாதி பயலுக பயந்து ஓடி மறஞ்சாங்கெ..."

"விருந்தாடி வந்த பயலுக, வேடிக்கை பார்த்துக்கிட்டு நின்னவங்கெ ரோசம் பொறுக்க முடியாமே, வரிஞ்சிகட்டிக்கிட்டு 'வாங்கடா ஒரு கை பார்போம்'முன்னு அடி, நெறவிபுட்டாங்கே... நெறவி!"

*தேர் நெல கொண்டு நின்ன எடமெல்லாம் தென்தூசி பறந்தது!*

*அருவாளோடு கம்பீரமாய் சுத்தி காவலுக்கு நின்ன தெய்வமெல்லாம் உசுர கையில புடுச்சிக்கிட்டு கழிஞ்சிக்கிட்டு நின்னுச்சி!*

*மேல் சாதி காரனை, கீழ்சாதி காரன் அடிச்சது இதுதான் முதல்முறை. நம்பவே முடியல, பார்த்த கூத்தாயிக்கே வேத்துப்போச்சி!*

"இருக்குற கள்ளப்பய பூறா பறத்தெரு போய் படுத்து புள்ளபெத்தா, அப்பறம் எப்புர்றா? கள்ளப்பய நம்மள அடிக்காம விடுவாங்கெ? நம்ம பெத்தப்புள்ளதான், நம்மள அடிக்கிறாங்கெனு நெனச்சி மனசுல வச்சிக்கிட்டு, ஒதிங்கி போய் தொலங்கடா"னு, வேலுச்சாமி ராங்கியர் தலையிட்டு மத்துசம் பண்ணிவிட்டாரு.

பாத்தியாடா... நம்ம நடத்தைய எப்படி குத்திக்காட்டி இழிவுப்படுத்தி பேசுரானேனு நெனைக்கும்போதே? ஏண்டா, நம்ம ஊட்டுப்புள்ள அவெ ஊட்டுல வளர்ருது, அவெ ஊட்டுப்புள்ள நம்ம ஊட்டுல வளர்ருது.

அன்னக்கி அவெ ஊட்டுல பண்ணைக்கி இருந்தவனேல்லாம். ஒவ்வொருத்தியை கொக்கிப் போட்டு வச்சிகிட்டு. அங்கேயே குடி கெடந்தது. இந்த ஊரு ஒலகத்துக்கு தெரியாதாயென்ன?

"நான் வேனுனா முன்னடியன் மேல சத்தியம் பண்ணிச் சொல்லவா?" என்று பேச வாயெடுத்ததும்...

சாதியெல்லாம் சாமி வாசல்ல சந்திச்சிருச்சிப்போச்சி.

"தப்படிக்கிறதும், மது சட்டித் தூக்குறதும். அடிமைத் தொழிலில்லே, இது சாமிக்கி... நீ செய்யுறதொண்டு, இது ஆதியிலேயிருந்தே... அப்படித்தான் நடக்குது, நீ படிச்சிருந்தா? அதுக்காக ஊர் வளக்கத்தே புதுசா மாத்த முடியுமா?"னு, சாமி

பேரச் சொல்லியே இன்னும் நம்மல ஏமாத்த பாக்குறாங்கப்பா என்று அப்பன், முகத்தை நேராப் பார்த்துப் பேச பயந்து... குனிந்து காலப் பார்த்துக் கொண்டே சொன்னான், வழக்கமாய் கடலில் சிக்கி கதறிதினம் ஒலமிடும் மீனவன் புகைப்படம் போல் இருந்தது சாத்த ஊமையன் முகம்.

சாத்த ஊமை கன்னத்தில் அரைந்த அரை, ஐந்து விரலும் பதிய கன்னம் ஆராத தனலாய் சிவந்து போய் இருந்தது.

பெத்தப்புள்ளே புலிக்கிட்டே மாட்டிக்கிட்டா? பத்திரக் காளியாயிடுவா... அவதான் தாய்!

"ஐய்யோ...?"

"இது நாளுவரைக்கும் என் புள்ள மேல்ல எவனும் பச்சமண்ணு எடுத்துப் போட்டதில்லையே?"

"ஊருப்பய அடிக்கவாடா... ஒன்னே நான் பெத்தேன்?"

"ஐய்யோ... ஏன் சதுரம்மாடுதே? ஏன் ஈரக்குலையேல்லாம் வேவுதே?"

"நீ என் வயித்துல நெறமாசமாயிருக்கும் போது,
கண்ணுக்குடி கிராமத்துல... ஏன் காலுப்படாத எடமேயில்லே...!
மஞ்சமினா மரத்துல... போக்காளி ஓன் அக்காவே தொட்டிக்கட்டிப் போட்டுட்டு
கடலை ஆஞ்சிக்கிட்டு இருக்கும் போது...
இடுப்ப வலிச்சி கண்ணுக்குடி சேத்துல கயிறப் புறண்டேன்...
நொப்புச்சிமேல நம்மசாமி வந்து ஆடி...
கொம்புலே பழுத்தப் பழம் இனி தங்காது,
உச்சிப்பொழுது கீழ தலச்சாய்யிரத்துக்குள்ளே,
மீசேக்காரன் வந்துப் பொறக்கப்போறண்டா".

கட்டவுத்து, தானே தொணே நின்னு காவாந்துப் பண்ணித்தாறேன்.
வர கூச்சலுக்கு... கூத்தாலுக்கு மண்ணடில தலைக்கும் காலுக்கும்மாய்
நெறஞ்ச மல்லியிலே ஒரு ஆரம் கட்டிப்போடு!!னு,
நொப்புச்சி துண்ணூருப் போட்ட பொறவுதான் நீ வந்துப் பொறந்தே.

ஒன்ன பெத்தடுக்க, எடுக்காத விரதமில்லே,
நானும், நொப்பனும் போகாத கோயிலுயில்லே கும்புடாத சாமியில்லே,
ஒண்ணபெத்தும், இன்னும்... எங்களுக்கு நல்ல நிம்மதியில்லையடானு,



மாரியாயி சாத்த ஊமையை கட்டி அணைச்சி ஒப்பாரி வைச்சியழுதா!

பறவைகள் வந்து அமரமுடியாத கோடையில் இலையுதிர்ந்த மரமாய் நின்னான் சங்கரன்.

"சாத்த ஊமையை திட்டாதடா சங்கரா..." நான் செத்தனைக்கி எனக்கு பாடை மரம் தூக்குறவன் அவந்தான்! ஊரே எதுத்தாலும்... அவென் ஒத்தாலும் அன்னெக்கியிருந்தா? என்னெக் கொண்டுப்போய் செலஞ்சேரி சுடுகாட்டுலே கரமாறம் சேத்துருவான்! இப்போ இவென் இப்புடியிருக்குறானு... நீ நெனைக்காதே? பிற்காலத்துல இந்த ஊரே மெச்சிப் பேசும்படி அவென் டாப்பா வந்துருவான்! அவெ நாவுலே அந்த மகமாயியே வந்து குடியிருப்பா"னு, வண்ணாத்தா அப்பாயி கெழவி சொன்னதை, அண்ணாந்து மோட்டுவளவிட்டத்தை பார்த்தவாறு நௌச்சிப் பார்த்தான் சங்கரன்!

மாரியாயி அழுதழுது முகம் வீங்கி, முடிகலஞ்சி மாராப்பு சேலை மார்பகத்தைவிட்டு நலுவி ஒரம் கிடந்தது. திண்ணையை மறைத்து கட்டியிருந்த பின்னிய தென்னம் மட்டையின் இடை சந்து ஓட்டைக்குள், விரலை விட்டு கிழித்தாவறுயிருந்தான் சாத்த ஊமை. அடுத்தக் கணம் பதட்டத்தோடு.

நெரைக்கட்டி திறந்துவிட்ட அணை, ஆர்ப்பரித்து கடைமடை வரைப் போய்... காய்ந்தநிலங்களுக்கு கரம் கொடுப்பதுப்போல், சாத்த ஊமையை கட்டிபிடித்து ரோமங்கள் நிறைந்த நெஞ்சிலே அணைத்தான் சங்கரன்.

"அப்பன் நான் அடிக்க மாட்டேடா, பயப்புடாதே!" என்று சாத்த ஊமையின் தலைமுடிக்குள் விரலை விட்டு கோதியவாறு நெனச்சி... நெனச்சிப் பார்த்து அழுதான் சங்கரன்.

அப்பன் அழுதததை, இதுவரை பார்க்காதவன். "நீ அழுவாதப்பா... அழுவாதப்பா"னு கிடந்து கெஞ்சினான்.

"நீ நல்லாயிருக்கதான்டா, நான் அழுவுறேன்..."

"நீ பொறந்து கீழ விழுந்ததும், நொம்மாளுக்கு... போக்காப் போனுச்சி, மாத்துச் சீலேயில்லே? ரொக்கம் கொண்டுப் போனா பட்டுக்கோட்டை சீலம்பாக்கிட்டே பாத்துப் புடலாமுன்னு சொன்னாக?"

பண்ணையடிச்சி யாவுது ரொக்கமே கொண்டுப் போனாலும்... நாதியத்த பயமக்க நம்மல... நடப் பாதையிலே பொட்டு விக்கிற ஏழை யாவரியே மாறி யாரு மதிக்கிற?

கொள்ளுக்காடு கொழந்தையப்புச்சி ஊட்டுல பத்து வருசம் பண்ணைக்கியிருந்து ஒன்னேப் படிக்க வைச்சேன், என் புள்ளக்கியும், ஏன் நெலம வந்துரக் கூடாதுன்னு! அதம்பை குளத்து தண்ணியில ஆயிரம் களம் நாத்து நட்டு, யானைக் கட்டிப் போரடிச்ச, அந்த காலத்து மகராஜான்னே வந்துப் பாத்தாலும்... தெரியாது? ஒழைச்சியே... தேஞ்ச ஒன் அப்பன் கை ரேகை!

நொம்மாவுட்டு உதுரத்துணியே தொவச்சிப்போடக்கூட உப்புச் சோப்பு வாங்க காசில்லே? ஒவர் மண்ணைப் போட்டுத் தேச்சாவாப் போவும்? நொம்மாளுக்கு, “சரக்குச் சாமன்” வாங்கிக் கொடுத்து, செலவுக்குவேற இருபத்தைந்து ரூபாக் காசுக்கொடுத்து, “சாத்த ஊமை”ங்குற ஒன்பேரே “ஜீவ பாரதி”னு, மாத்திவச்சி, அன்னக்கி காடுவெட்டிவிடுதி சிலம்பன் மக்க ஏத்திவைச்ச திருவெளக்குத் தாண்டா... இன்னவரைக்கும் அணையாமே எரியுது”னு, சொல்லும் போதே... கேட்டு சேர்ந்து அழுத மகன் சாத்த ஊமை கண்ணீரை துடைத்தான் சங்கரன்.

அடைகாத்த வனம் ஆர்ப்பரித்து ஆலமரத்திலிருந்த கரச்சான் குருவிகள் குதூகளித்தது, மணி முழு ராத்திரி மூனுயிருக்கும்.

“விடிஞ்சதும் ஊருக்காரன் கூட்டம் வைச்சி... ஒன் மேல என்னக் கொலப்பழி சுமத்துனாலும். அது என் தலையிலே விழட்டும். நீ கெழம்பி மெட்ராசுக்கு அங்குட்டு, எங்கேயாவுது... கண்ணுக்காணாத தேசத்துலே போயி பொழச்சிக்க... “சாதி சனம் தொணையில்லேனாளும்? நம்ம சாமி தொணேயிருக்கும்”! முன்னு சங்கரன் அடிமனசு அழ... மகனை கிளப்பினான்.

“ஒண்ணையும், அம்மாவையும் விட்டுப்புட்டு நான் எங்கேயும் போமாட்டேப்பா, வேணாப்பா... வேணாப்பா”னு சங்கரன் கழுத்தை கட்டிக் கெடந்து அழுது எரஞ்சான் சாத்த ஊமை.

“சொல்றதே கேளுடா தங்கம் ஊருசனம் முளிக்கப் போவுது...? காலடி சத்தம் கேட்டாலே... மொத்த காலனி சனமும் கூடிறும், கலங்காமே கெளம்புசாமி, இனி... மொதக்காரு வந்துருமுன்னு”, சமாதானம் செய்து, போக... தேற்றினான்.



“ஊருக்காரேன் ஒன்ன அடிச்சி, அவராதம் கட்டச்சொல்லி, வெத்தல வச்சி காலுலக் கும்புட்டு விழச் சொல்லுரதே... நானும் நொப்பேனும் பாத்து சகிச்சிக்கிட்டு நம்ம சாதிக்காரன் மாறி நிக்கமுடியாது, அங்குனேயே உசுரே மடிச்சிக்கிவோம், நீ கெளம்பி போடா செல்லம்... அந்த கூத்தாயி ஒனக்கு தொன வருவா”னு, மாரியாயியும் மகனை கெளப்பிக் கொண்டே அழுதாள்.

குடிச்சபாலு இன்னும் கொடும்புல இருக்கு, அம்மா கொடங்கைகுள்ளேயே கெடந்து வளர்ந்தபுள்ளே, வெளிதேசமே காணாமல் வீட்டுக்குள்ளேயே பறந்து திரிந்த விட்டில் பூச்சி, அழுது குமரிக் கொண்டு போகும் வழியும் தெரியாமல் சேரும் இடமும் தெரியாமல் எத்திசை இருளில் கிழம்பினான் சாத்த ஊமை.

இருபதஞ்சாம் நம்பர் பஸ் ஊரணிபுரத்தை விட்டு, திரும்பி சிவ விடுதிக்குள்ளே வந்துக் கொண்டிருந்தது.

சவுலிக்கடை மஞ்சப்பைக்குள்ளே எல்லாத் துணியையும் வச்சி அமிக்கி தூக்கிட்டு, காவக்காரன் காட்டுபாதெ ஒத்தையடி தடம் வழியே... மகனை நடுவே விட்டு அழைத்துக்கொண்டு மூனும் பேருமாய் போனாங்க... யாரும் பார்த்துவிடாம வேகமாய் நடையை போட்டு, பஸ்சை பிடிக்க...

ஊருக்கே தெரியாமல் ஒளிந்தேப் போனாலும்... ஓலை வீட்டுக் கண்ணீர் ஓசைப் படாமல் விழுந்து, அந்த ஒழுங்கைப் பாதை வழி நனைந்தேப் போனது!

ஒத்த தாணி மரம் போனதும்? நடுப்பாதையிலே கீழே குனிஞ்சி ஒரு கை மண்ணையள்ளி நெத்தில பூசிட்டு, சாத்த ஊமை கையில கொடுத்தான் சங்கரன், “இதெ தல மாட்டுலே வைச்சி படுத்துக்கொ, தெனமும் ஆயியப்பன் எங்கள நெனச்சி நெத்தில பூசிக்கெ, ஒனக்கு ஒரு கொறையும் வராது”னு.

பஸ்வரும் அதிர்வு சத்தம் கேட்டது...

கேட்ட சத்தம் இனியொரு தாய், தகப்பன் கேட்ககூடாத சத்தம்.

காலுக்குள்ளேயே பின்னிக்கிடந்து ‘மூச்சிக்கு மூச்சி... அம்மா அம்மானு’ முந்தானையை பிடித்துக்கொண்டு சுத்தி, சுத்தி வந்த நம்ம புள்ளே, இன்னக்கி, நம்மல பிரிந்து போகப்போறானேனு, மாரியாயி...

'பொசுக்குனு' தாலிக் கொடியை கலட்டிக் கொடுத்தாள், இது ஒன் அம்மாவுட்டு பித்தாள தாலி, இது ஒனக்கு, வேற எதுக்கும் ஒதவாது? ஒனக்கு அம்மா ஞாபகம் வரும் போதல்லாம்... இதயெடுத்துப் பாத்துக்க, அம்மா ஒன் நெனப்பாவேயிருப்பேன்"னு, சொன்னா.

சாத்த ஊமை அம்மா காலுல விழுந்து சத்தம் போட்டு கதறினான்.

பஸ் அருகில் வந்து நிறுத்தத்தில் நின்றது.

"சீக்கனம் ஏறுங்க மணியாச்சி, இதான் மொத சிங்கிலு"னு படியில் நின்றவன் சொன்னான்.

முன் வாசல் படியில் ஏறி, பின் வாசல் படி வரை... பஸ்சுக்குள் அங்கும், இங்குமாய் ஓடினான்... சன்னல் வழியா அம்மா, அப்பாவுக்கு கை காட்ட...

பஸ் அதுக்குள், காப்பிகடை வளவு திரும்பிவிட்டது.

மகனை விடைக் கொடுத்த இடத்துலேயே பறிக் கொடுத்ததுப் போல் உதிரம் உருக உரு சிதைந்து நின்றார்கள்? சங்கரனும், மாரியாயியும்.

முற்றத்திலிருந்த முழுநிலா முழுதும் மேகத்துக்குள் மறைந்தது. சில்லோடைக் காற்று சிலுசிலுவென்று கீழத்தெரு வெங்கும் வீசியது. பொழுது, பனிபோல பளப்பளனு விடிந்துக் கொண்டேயிருந்தது...

பளப்பளனு பொழுது விடிஞ்சதும் மேல டீக் கடைக்கு, டீக்குடிக்க வந்த திலகராஜா.

"என்னடா... காலங்கார்த்தாலயே கீழப்பறத்தெருலே ஒரே, எரச்சலாக் கெடக்கே"னு, காத்தான் மவன் காமராசேக் கேட்டான்.

"வெள்ளரிக்கு வைக்க, வைச்சிருந்த, குருணா மருந்தே தின்னுப்புட்டு சங்கரனும் அவென் பொண்டாட்டியும் கதவே சாத்துனவாக்குல செத்துக் கெடக்குறாகலாம் பூசாரிதெரு சனமே அடிச்சியலறிக்கிட்டு போகுது... அந்த கோலத்த பார்க்க...னு" சொன்னான்.

• • •